# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **58/மா/2017**

ஆணை எண். **163/2017**

நாள் : **19/06/2017**

திரு அருண்பிரபு,
புளியந்தோப்பு,
சென்னை – 600 012. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர் /
மண்டல அலுவலர் (மண்டலம் –6),
சென்னை மாநகராட்சி,
சென்னை. – எதிர் மனுதாரர்கள்

சென்னை மாநகராட்சி, புளியந்தோப்பு, திரு.வி.க. நகர் விரிவு, மகாத்மா காந்தித் தெரு, எண்.1 முகவரியில் வசிக்கும் திரு P.அருண்பிரபு அவர்களின் 21.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2017 அன்று பெறப்பட்டு 58/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் சென்னை மாநகராட்சி, 6–வது மண்டல அலுவலரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, புளியந்தோப்பு, திரு.வி.க. நகர் விரிவு, எண்.1, மகாத்மா காந்தித் தெருவில் வசிக்கும் திரு P.அருண்பிரபு என்பவர், சென்னை மாநகராட்சி, 72-வது வட்டம், திரு.வி.க. நகர் தெருக்களில் போடப்படும் சாலைகள் குறித்து, கீழ்க்காணும் நடைமுறை குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்:-

(1) மத்திய அரசின் ஆணையின்படி, சாலைகளைப் புதுப்பிக்கும் பொழுது பழைய சாலையை பெயர்த்து எடுக்காமல் புதிய சாலை போடுவது ;

(2) தெருவின் சாலையை விட வீட்டின் தரைப்பகுதி உயரமாக இருக்க வேண்டும் என்ற நியதியைப் பின்பற்றாதது ;

(3) சிமெண்ட் சாலை போடும் இடங்களில் மழைநீர் சேமிப்பு திட்டத்தை செயல்படுத்தத் தவறுவது ;

(4) சாலையினை பெயர்த்து எடுக்காமல் புதிய சாலையினை அமைப்பதால் மின்சார பிரதான கம்பிகள் மற்றும் குடிநீர் குழாய்கள் அதிக ஆழத்தில் புதைந்து விடுவது ;

(5) பழைய சாலையை பெயர்த்து எடுக்க ஒதுக்கிய நிதியை பயன்படுத்தாதனால் அந்த நிதியின் நிலைமை.

2. மேற்குறிப்பிட்ட மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து 6–வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. 25.05.2017 நாளிட்ட தனது அறிக்கையில், சென்னை மாநகராட்சி, கோட்டம் 72, 73 மற்றும் 76 பகுதிகளில், 37 உட்புறச் சாலைகள் அமைப்பதற்கான ஒப்பந்தம் திருவாளர்கள் கன்ஸ்டரக்டிவ் பியூப்பிள் இன்பிரா புராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் (M/s Constructive people Infra Project Private Ltd.) என்ற நிறுவனத்திற்கு இறுதி செய்யப்பட்டதென்றும், அந்நிறுவனத்தின் இசைவு கடிதம் 29.02.2016–ல் பெறப்பட்டது என்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் 72–வது கோட்டப் பகுதியில் சாலைகளை பெயர்த்து எடுக்காமல் புதிய சாலை அமைத்தது குறித்து, 8138/2017 எண்ணிட்ட நீதிப்பேராணையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததாவும் அவ்வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளதென்றும் தெரிவித்துள்ளார் :-

> *"An order directing the respondents to consider the representation of the petitioner at this stage after the roads have been laid will serve no fruitful purpose. However, the contentions of petitioner contained in the representation may be taken into consideration for repairs and further laying of roads in future."*

மேற்குறிப்பிட்ட தீர்ப்பு 13.04.2017 அன்று வழங்கிய பின்பு, இவ்வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, சாலைகளின் நிலையினைக் குறிப்பிட்டு புது சாலை அமைக்கும் பொழுது, அவற்றினைப் பெயர்த்து சாலை அமைக்க இயலாது என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக, 15.06.2017 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப் பட்டது. முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட நாளில் விசாரணைக்கு வருகை தரவில்லை.

4. இந்நேர்வு, சம்பந்தப்பட்ட பொருள் சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே தொடுத்த வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு வழக்கும் முடித்து வைக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினைத் தொடர்ந்து, சாலைகள் அமைப்பது சம்பந்தமாக உரிய தெளிவுரையும் முறையீட்டு மனுதாருக்கு மாநகராட்சி அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்நேர்வின் மீதான மேல்நடவடிக்கை தேவையில்லையெனக் கருதி, அவ்வாறே முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 19–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு P. அருண்பிரபு,
   எண்.1, மகாத்மா காந்தி தெரு,
   திரு.வி.க. நகர், புளியந்தோப்பு,
   சென்னை – 600 012.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் – 6,
   சென்னை மாநகராட்சி,
   எண்.5, ஆன்டர்சன் சாலை, அயனாவரம்,
   சென்னை – 600 023.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்